# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## தகைமைகள்

## கல்விப் பதவியணியினர்

**முகாமைத்துவ, சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்**

**01. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I/II**

01. விண்ணப்பதாரர்கள் இந்த ஆவணத்தில் விரிவுரையாளர் பதவியின் (தகுதிகாண்) கீழ் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ளவாறு விரிவுரையாளருக்கு (தகுதிகாண்) [(மருத்துவம்/பல் மருத்துவம் சாராத)] தேவைப்படுத்தப்படும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

02. (i). உரிய பிரிவில் ஒரு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii). (a) ஆய்வறிக்கை/ஆய்வுக் கட்டுரை வழியில் ஒரு ஆராய்ச்சிக் கூறு அடங்கலாக ஆகக்குறைந்தது 24 மாத கால ஒரு முழுநேரக் கற்கைப் பாடநெறியை (அல்லது அதற்கு சமனான பகுதி நேரக் கற்கைப் பாடநெறி) பின்பற்றி பூர்த்திசெய்த பின்னர் உரிய ஒரு பிரிவில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii). (b) ஆய்வறிக்கை/ஆய்வுக் கட்டுரை வழியில் ஆகக்குறைந்தது 60 மதிப்புப்புள்ளிகளுடன்* அதிலும் ஆராய்ச்சியில் 15 மதிப்புப்புள்ளிகளுக்கு* குறையாமல் உரிய பிரிவில் ஆகக்குறைந்தது 18 மாத கால முழுநேர முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

[*ஒரு பாட அலகுக்கு/மொடியூலுக்கு கருத்திற்கொள்ள வேண்டிய ஒரு மதிப்புப்புள்ளி இலங்கைத் தகைமைகள் வேலைச்சட்டத்திற்கு (SLQF) இணங்க இருக்க வேண்டும்.

அல்லது

(iii). ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் குழுவினது சிபாரிசின் பேரில் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்படலாம் எனும் அத்தகைய தொழில் தகைமைகளையும் அனுபவத்தையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

03. (a) **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I இற்கு** - ஆகக்குறைந்தது பன்னிரெண்டு (12) வருட அனுபவத்தை [அதில், மேற்குறித்த 2 இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றதன் பின்னர் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்].

(b) **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்கு** - பின்வரும் விடயங்கள் ஒன்றில் அல்லது அதற்கு அதிகமானவற்றில் ஆகக்குறைந்தது ஆறு (06) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- (i) பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்தல்
- (ii) தொழில்சார் அனுபவம்
- (iii) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் ஆராய்ச்சி
- (iv) பட்டப்பின்டிப்புக் கற்கைகள்

1997.11.21 ஆம் திகதிய 721 ஆம் இலக்க UGC ஆணைக்குழு சுற்றறிக்கையின் 6 ஆம் இலக்கப் பதவியின் கீழ் காணப்படும் குறிப்புகளை/விஷேட குறிப்புகளை தயவுசெய்து பார்க்கவும்.

**02. விரிவுரையாளர் பதவி (நிரந்தரமாக்கப்படாத)**

01. விண்ணப்பதாரர்கள் இந்த ஆவணத்தில் விரிவுரையாளர் பதவியின் (தகுதிகாண்) [(மருத்துவம்/பல் மருத்துவம் சாராத)] கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு வகுதி (1) அல்லது (2) இன் பிரகாரம் தேவைப்படுத்தப் படும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

2. (i) உரிய பிரிவில் ஒரு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii). (a) ஆகக்குறைந்தது 24 மாத கால முழுநேர ஆராய்ச்சியுடன் உரிய பிரிவில் ஒரு முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(b) ஆய்வறிக்கை/ஆய்வுக் கட்டுரை வழியில் ஆகக்குறைந்தது 60 மதிப்புப்புள்ளிகளுடன்* அதிலும் ஆராய்ச்சியில் 15 மதிப்புப்புள்ளிகளுக்கு* குறையாமல் உரிய பிரிவில் ஆகக்குறைந்தது 18 மாத கால முழுநேர முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

[*ஒரு பாட அலகுக்கு/மொடியூலுக்கு கருத்திற்கொள்ள வேண்டிய ஒரு மதிப்புப்புள்ளி இலங்கைத் தகைமைகள் வேலைச்சட்டத்திற்கு (SLQF) இணங்க இருக்க வேண்டும்].

அத்துடன்

(iii) இந்த ஆவணத்தின் 03 ஆம் இலக்கப் பதவியில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II இற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2018.08.02 ஆம் திகதிய UGC ஆணைக்குழுவின் 07/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 (b) பதவியின் கீழ் காணப்படும் குறிப்புகளை/விஷேட குறிப்புகளைப் பார்க்கவும்.

**03. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்)**

i. உரிய பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) விஷேட கௌரவப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

ii. உரிய பாடத்தில் இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) விஷேட கௌரவப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

iii. (a) உரிய பாடத்தில் கௌரவப் பட்டம் இல்லாமல் விஷேட பட்டத்தை அல்லது ஆகக்குறைந்தது இரண்டாம் வகுப்பு கௌரவப் பட்டத்துடன் வேறு ஏதாவது பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(b) ஆய்வறிக்கை/ஆய்வுக் கட்டுரை வழியில் ஒரு ஆராய்ச்சிக் கூறுடன் உரிய பாடத்தில் ஆகக்குறைந்தது 02 கல்வி ஆண்டு காலப் பட்டப்பின்படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

iv. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் குழுவினது சிபாரிசின் பேரில் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்படலாம் எனும் அத்தகைய கல்வித் தகைமைகளை அல்லது தொழில்சார் தகைமைகளை அல்லது தொழில் அனுபவத்தை பெற்றிருத்தல்.

| |
|---|
| மேலேவுள்ள (ii) அல்லது (iii) ஆம் வகுதியின் கீழ் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள், தேர்வுக் குழுவினால் கிடைக்கக்கூடியதாக இல்லை அல்லது மதிப்பிடப்பட்டு திருப்தியற்றது எனக் கருதப்படுவர்கள் மேற்குறித்த (i) இன் கீழ் தகைமை பெறுவார்களாயின் மாத்திரம் நியமனத்திற்காக கருத்திற்கொள்ளப்படக்கூடும். |

1997.11.21 ஆம் திகதிய UGC ஆணைக்குழுவின் 721 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் இலக்கப் பதவியின் கீழ் காணப்படும் குறிப்புகளை/விஷேட குறிப்புகளை தயவுசெய்து பார்க்கவும்.

**<u>சிரேஷ்ட விரிவுரையார் (நிரந்தரமாக்கப்படாத மற்றும் (தகுதிகாண்) பதவி தரம் I/II ஆகியவற்றுக்கு விண்ணப்பித்திருக்கின்ற விண்ணப்பதாரர்களுக்கான விஷேட குறிப்பு:</u>**

01. 721 ஆம் இலக்க UGC சுற்றறிக்கையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் (2) அல்லது (3) ஆம் வகுதியின் கீழ் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள், தேர்வுக் குழுவினால் கிடைக்கக்கூடியதாக இல்லை அல்லது மதிப்பிடப்பட்டு திருப்தியற்றது எனக் கருதப்படும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் (1) ஆம் வகுதியின் கீழ் தகுதியுடையவர்களாக இருந்தால் மட்டும் நியமனத்திற்காக கருத்திற்கொள்ளப்படக்கூடும்.

02. கல்வி மற்றும் கல்வித் துணைப் பதவிகளுக்கான விண்ணப்பதாரர்கள் அவர்களின் கற்பித்தல் ஆற்றலை நிறூபிக்கும் பொருட்டு தேர்வுக் குழுவின் முன்னிலையில் விளக்க சமர்ப்பணத்தை (ஆங்கிலத்தில்) செய்யுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

03. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் தற்பொழுது அரசாங்கத் திணைக்களங்களில் பணியாற்றினால் அவர்கள் பொது நிருவாக அமைச்சின் ஊடாக விடுவித்துக்கொள்ள வேண்டும். அரசாங்க ஊழியர்கள் பல்கலைக்கழக சேவையிலிருக்கும் போது அவர்களின் ஒய்வூதிய உரிமைகளை பேணுவதற்கு அவர்களுக்கு உரித்துக் கிடையாது.

**சம்பள அளவுத்திட்டங்கள்**

01. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I

U-AC 3 (I) ரூ. 91,310 - 7x2,170 - 106,500 மாதாந்தம் + (189% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

02. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II

U-AC 3 (II) ரூ. 79,360 - 11x1,630 - 97,290 மாதாந்தம் + (189% கல்விசார் கொடுப்பனவு+ அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

03. விரிவுரையாளர் பதவி (நிரந்தரமாக்கப்படாத)

U-AC 3 (III) ரூ. 69,580 - 5x1,630 - 77,730 மாதாந்தம் + (164% கல்விசார் கொடுப்பனவு+ அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

04. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்)

U-AC 3 (IV) ரூ. 54,600 - 10x1,335 - 67,950 மாதாந்தம் + (144% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

**ஏனைய நன்மைகள்**

- ஏற்புடைய பதவிகளுக்கான சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை, கல்விக் கொடுப்பனவுகள் மற்றும் ஆராய்ச்சிக் கொடுப்பனவு
- ஊசேநி, ஊநநி, பணிக்கொடை
- இலவச சுகாதாரக் காப்புறுதி
- வருடாந்த ஊக்குவிப்புத் தொகைகள்
- ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள்
- KDU பல்கலைக்கழக வைத்தியசாலையில் முன்னுரிமை அடிப்படையிலான சிகிச்சைகள்
- நலன்புரி, போக்குவரத்து மற்றும் ஏனைய சிறப்புரிமைகள்